Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனி, அக்டோபர் 31, 2026 | இதழ் 201

அரசு பணிகளில் நேரடி நியமனத்துக்கான வயது உச்ச வரம்பை 5 ஆண்டுகள் உயர்த்தி முதல்வர் விஜய் உத்தரவு!

சென்னை, 31 அக்டோபர் 2026: அரசு பணிகளில் நேரடி நியமனத்துக்கான வயது உச்ச வரம்பை 5 ஆண்டுகள் உயர்த்தி முதலமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளார். வயது உச்ச வரம்பு இன்று முதல் 5 ஆண்டுகள் வரை நடைமுறையில் இருக்கும் என்று தமிழக அரசு சார்பில் முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைஞர்களின் நலன்காக்க, போட்டித் தேர்வர்களின் கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு அரசு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆதரவற்ற விதவைகள் உள்ளிட்ட இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு ஏற்கனவே நடைமுறையில் உள்ள வயது வரம்பு சலுகையோடு கூடுதலாக அமையக்கூடிய வகையில் மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது.

மாற்றி அமைக்கப்பட்டுள்ள இந்த வயது உச்ச வரம்பு இன்று முதல் அடுத்த 5 ஆண்டுகள் வரை நடைமுறையில் இருக்கும் என்றும் தமிழக அரசு சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய உத்தரவின்படி, குரூப்-1 பணிகளுக்கான அதிகபட்ச வயது வரம்பு பொதுப்பிரிவினருக்கு 32 வயதாக இருந்த நிலையில் தற்பொழுது 37 ஆகவும், இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு 37 வயதாக இருந்த நிலையில் தற்பொழுது 42 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகள் (பொதுப் பிரிவு) 42-ல் இருந்து 47 ஆக உயர்வு; மாற்றுத் திறனாளிகள் (ஒதுக் கீட்டுப் பிரிவு) 47-ல் இருந்து 52 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோல, குரூப்-2 மற்றும் 2-ஏ பணிகளுக்கு பொதுப்பிரிவினருக்கான 30 வயதாக இருந்த நிலையில் தற்பொழுது 35 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது; இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு வயது வரம்பு ஏதுமில்லை. மேலும், மாற்றுத்திறனாளிகள் (பொதுப் பிரிவு) 40-ல் இருந்து 45 ஆக உயர்வு; மாற்றுத்திறனாளிகள் (ஒதுக்கீட்டுப் பிரிவு) உச்ச வயது வரம்பு ஏதுமில்லை உயர்த்தப்பட்டுள்ளது.

தோல்வி அடைந்த பாகிஸ்தான்: வெளிச்சத்துக்கு வந்த திருட்டு வேலை - எங்கே போனது 5,876 கோடி

சென்னை 31, அக்டோபர் 2026: அரபு நாடுகளின் உதவியுடன் மிக பெரும் திருட்டு வேலையில் பாகிஸ்தான் ஈடுபட்டுள்ளது. இந்தியாவை நம்பி நாங்கள் இல்லை என்று சொல்லிவிட்டு மறை முகமாக இந்த செயலை செய்து கொண்டு இருக்கிறது பாகிஸ்தான். கடந்த 2025-ம் ஆண்டு ஏப்ரல் 22-ம் தேதி அன்று கேஷ்மீரியில் பகல்கம் பகுதியில் சுற்றுலா பயணிகள் மீது தீவிரவதா தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் 28 பேர் உயிரிழந்த நிலையில் 20-கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இதனால் கடும் கோபம் அடைந்த இந்திய அரசு ஆப்பரேஷன் சிந்தூர் என்ற ராணுவ நடவடிக்கையையும் அதிரடி பொருளாதா தடைகளையும் விதித்தது. இந்த சம்பவத்திற்கு பிறகு இந்தியாவிலுருந்து இறக்குமதி செய்யப்படும். பல்வேறு உயிர் காக்கும் மருந்துகள், மருத்துவ மூல பொருட்கள், இராசாயினங்கள், சில உணவு பொருட்கள் பாகிஸ்தானுக்கு கிடைக்காமலே இருந்தது.

அனால் இந்தியாவை நம்பி நங்கள் இல்லை என்று வெளியில் வீர வசனத்துடன் பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் தொடர்ச்சியாக கூறி வந்தனர். இந்நிலையின் இந்தியாவின் பொருட்களை மறைமுகமான வகையில் பாகிஸ்தான் இறக்குமதி செய்து வருவது தற்போது தெரியவந்துள்ளது .அதாவது 2026,2027-ம் நிதி ஆண்டின் முதல் காலாண்டில் இந்தியவிடமிருந்து 5,876 கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்களை பாகிஸ்தான் மறைமுகமாக இறக்குமதி செய்துள்ளது. இது முந்தைய ஆண்டின் இதே காலாண்டை ஒப்பிடுகையில் 69 சதவீதம் அதிகம் என்று கூறப்படுகின்றது.

வணிக தடைகள் இருந்தும் இதனை சாத்தியமாக்க பல்வேறு திருட்டு வேலைகளில் பாகிஸ்தான் ஈடுபட்டுள்ளது. முதலில் இந்தியாவிடமிருந்து பெறப்படும் பொருட்கள் ஐக்கிய அரபு, மர்ச்சே, சிங்கப்பூர் இலங்கை போன்ற ரூாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. பிறகு அங்கு இருக்கும் பொருட்களுக்கு லேபிள்கள் மாற்றப்பட்டு அந்தந்த நாடுகளின் பொருட்களை போலவே பாகிஸ்தானுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இவ்வாறன முறை யில் சுமார் ஆண்டு தோறும் 10 பில்லியன் டாலர் வரை அதிகார பூர்வ மற்ற முறையில் ஏற்றுமதி நடத்தப்பட்டுருக்கிறது. இதே பொருட்களை ஐரோப்பிய போன்ற நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்தால் பலமடங்கு விலையை செலுத்த வேண்டி இருப்பதால் பாகிஸ்தான் இந்த வேளையில் ஈடுபடுவதாகவும் கூறப்படுகின்றது.

குஜராத்தில் ரூ.14,000 கோடி மதிப்பிலான வளர்ச்சி திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்

சென்னை 31, அக்டோபர் 2026: குஜராத்தில் ரூ.14,000 கோடி மதிப்பிலான வளர்ச்சி திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். பிரதமரின் விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் ரூ.19,000 கோடியை விடுவித்தார். அகமதாபாத் மெட்ரோவின் 2ம் கட்டத்தின் 'ஏ' மற்றும் 'பி' பகுதிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

அக்டோபர் 30 அன்று காலை 9.30 மணியளவில் பனஸ்கந்தாவிலுள்ள கருமுட்டை பரிமாற்றத் தொழில்நுட்பம் - ஐவிஎஃப் ஆய்வகம், பாரத கால்நடை இனப்பெருக்கம் மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பண்ணையைப் பிரதமர் பார்வையிட்டார் காலை 10.30 மணிக்கு பனஸ்கந்தாவில் ரூ.14,000 கோடிக்கும் அதிக மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டி, புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்தார். அத்துடன் பிரதமரின் விவசாயிகள் வருவாய் ஆதரவுத் திட்டத்தின் கீழ் 24-வது தவணையாக ரூ.19,000 கோடியை விடுவித்து, இரண்டு ரயில் சேவைகளைத் தொடங்கி வைத்து உரையாற்றினார்

குஜராத்தின் பனஸ்கந்தாவிலுள்ள பில்தியில் அமைந்துள்ள பாரத கால்நடை இனப்பெருக்கம் மற்றும் ஆராய்ச்சி மையத்தை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார். 127 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இம்மையம் சிறப்பு அதிநவீன மையமாக அமைக்கப்பட்டுள்ளது. இம்மையம் கால்நடை இனப்பெருக்கம், மரபணு மேம்பாடு,

நவீன இனப்பெருக்க தொழில்நுட்பம் ஆகியவற்றை வலுப்படுத்தும். இது இனப்பெருக்க முறையை 10 முதல் 20 மடங்கு வரை அதிகரிக்கும். இது கன்க்ரெஜ் இன மாடுகளுக்காகப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட முதல் மையமாகும்.

தாரத், ரத்தன்பூர் ஆகிய இடங்களில் பனாஸ் பால் பண்ணை நிறுவனத்தின் இரண்டு உயிரி சிஎன்ஜி ஆலைகளுக்குப் பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார். இவை நாள் ஒன்றுக்கு முறையே 75 மெட்ரிக் டன், 100 மெட்ரிக் டன் சாணத்தைச் சுத்திகரிக்கும் திறன் கொண்டவையாகும்.

அகமதாபாத் மெட்ரோவின் இரண்டாம் கட்டம் - 2ஏ (விமான நிலைய விரிவாக்கம்), கட்டம் - 2பி (கிஃப்ட் சிட்டி விரிவாக்கம்) ஆகியவற்றுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார். இவற்றின் இரண்டாம் கட்டத்தின் 2ஏ பகுதி, கோதேஷ்வர் சாலை முதல் விமான நிலையம் வரை 6 கிலோமீட்டருக்கும் அதிகமான தொலைவில் ஐந்து நிலையங்களைக் கொண்டிருக்கும்.

அதேபோல், 2பி பகுதி கிஃப்ட் சிட்டி முதல் ஷாபூர் வரை 3.3 கிலோமீட்டருக்கும் மேலான தொலைவில் மூன்று நிலையங்கள் இருக்கும்.

தமிழர் ஒருவர் பிரதமர் ஆவார் - துணை ஜனாதிபதி சி.பி.இராதாகிருஷ்ணன்

சென்னை 31, அக்டோபர் 2026: மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் சாமி தரிசனம் செய்தார். அவருடன் கவர்னர் அர்லேகரும் உடன் இருந்தார்.

இதன் பின் சி.பி. ராதாகிருஷ்ணன் நிருபர்களிடம் கூறியதாவது: மீனாட்சி அம்மன் அருள் அனைவருக்கும் கிடைக்க விரும்புகிறேன். அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள். அரசியல் தொடர்புடைய கேள்விக்கு நானோ, கவர்னரோ பதிலளிப்பது சரியாக இருக்காது. அமைச்சரிடம் கேளுங்கள்.

தமிழர் ஒருவர் பிரதமர் ஆவதற்கான வாய்ப்பு என்றைக்கும் உள்ளது. ஜனநாயக நாட்டில் அனைவருக்கும் உள்ளது. குஜராத்தை சேர்ந்தவர், கர்நாடகாவை சேர்ந்தவர் பிரதமர் ஆன போது, தமிழகத்தை சேர்ந்தவரும் பிரதமர் ஆவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

இந்தியா வல்லரசு ஆவதை உலகின் எந்த சக்தியாலும் தடுக்க முடியாது. அனைவரையும் வழிநடத்தும் நாடாகவும், மனித இனத்தை அரவணைத்து செல்லும் நாடாகவும் உருவாகும். இன்று இருக்கும் சூழ்நிலையில் இந்தியா வல்லரசு ஆகும் நம்பிக்கை வந்துள்ளது. 4வது வல்லரசு நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது. விரைவில் முதலாவது வல்லரசு நாடாக மாறும். இவ்வாறு சி.பி.ராதாகிருஷ்ணன் கூறினார்.

மின்தடை

துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் மீனாட்சி அம்மன் கோயிலுக்கு வந்த நிலையில் திடீரென மின்சாரம் தடைபட்டது.

இது குறித்து தமிழக மின்துறை அமைச்சர் நிர்மல் குமார் வெளியிட்ட அறிக்கையில் கூறியதாவது:

துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் இன்று மீனாட்சி கோவிலக்கு வந்தார். அவர் மாலை 5:35 மணிக்குக் கோயிலுக்குள் நுழைந்தார். தரிசனம் முடித்து மாலை 6:25 மணிக்கு வெளியே வந்தார்.

அவரின் வருகை முன்னிட்டு, பிற்பகல் 3:30 மணி முதல் கோயில் முழுவதுமாக ஜெனரேட்டர் (மின் இயற்றி) வாயிலாக மின்சாரம் வழங்கப் பட்டது. இதற்கான ஏற்பாடுகள் முழுமையாகச் செய்யப்பட்டிருந்தன. மின்வாரியத்தின் உதவி நிர்வாகப் பொறியாளர் கோயில் மின் அறையில் உடனிருந்து உதவிகளை மேற்கொண்டார்.

தரிசனம் முடித்த பிறகு, கிழக்கு கோபுரத்திற்கு முன் துணை ஜனாதிபதி செய்தியாளர்களைச் சந்தித்தார். அந்த நேரத்தில், மின் அறையில் ஏற்பட்ட உட்புறக் கோளாறு காரணமாக, கோயிலுக்குள் மின்சாரம் தடைபட்டது. உடனடியாக, மின்சாரம் ஜெனரேட்டரிலிருந்து மின்சார வாரியத்தின் (இபி) விநியோகத்திற்கு மாற்றப்பட்டது. இந்த மாற்றம் 2 நிமிடங்களுக்குள் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஹீரோ மோட்டோகார்ப், நியோ-ரெட்ரோ ஸ்டைலிங் கொண்ட 'டெஸ்டினி 110 கிளாசிக்' பதிப்பை அறிமுகப்படுத்துகிறது

சென்னை 31, அக்டோபர் 2026: பண்டிகைக் கால சிறப்புப் பதிப்பில் புதிய இரு-நிற அமைப்புகள், தனித்துவமான கோடுகள், நிறத்திற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்ட பேனல்கள் மற்றும் பிரத்யேக 3டி சின்னம் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

உலகின் மிகப்பெரிய மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்கள் தயாரிப்பு நிறுவனமான ஹீரோ மோட்டோகார்ப், இன்று டெஸ்டினி 110 கிளாசிக் எடிஷனை அறிமுகப் படுத்தியது. இது அதன் பிரபலமான குடும்ப ஸ்கூட்டருக்கு ஒரு புதிய, தனித்துவமான ஸ்டைலைக் கொண்டு வருகிறது. பண்டிகைக் காலத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள இந்த புதிய ஸ்பெஷல் எடிஷன், கண்ணைக் கவரும் இரட்டை வண்ணக் கலவைகள், தனித்துவமான கோடு வடிவமைப்பு மற்றும் பிரத்யேக 3டி கிளாசிக் எடிஷன் சின்னம் ஆகியவற்றைக் கொண்டு டெஸ்டினி 110-ஐ அடுத்த நிலைக்கு உயர்த்துகிறது. அன்றாடப் பயன்பாட்டு வசதியை பண்டிகைக் காலத்தின் பொலிவுடன் இணைத்து, இந்த புதிய எடிஷன் டெஸ்டினி 110 வரிசைக்கு ஒரு ஸ்டைலான புதிய வெளிப்பாட்டைச் சேர்க்கிறது.

செப்டம்பர் 2025-ல் அறிமுகப்படுத்தப்பட்ட 'டெஸ்டினி 110' இந்தியக் குடும்பங்களின் அன்றாடப் பயணத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், சௌகரியம், வசதி மற்றும் எரிபொருள் சிக்கனம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து உருவாக்கப்பட்டுள்ளது. இதன் 'கிளாசிக் எடிஷன்' ஏற்கனவே உள்ள இந்த சிறப்பம்சங்களுடன் யூனித்துவமான 'நியோ-ரெட்ரோ' வடிவமைப்பையும் இணைத்து, தற்போதுள்ள தயாரிப்பு வரிசையில் ஒரு புதிய அழகியல் விருப்பத்தை வழங்குகிறது.

இந்த அறிமுகம் குறித்து கருத்து தெரிவித்த ஹீரோ மோட்டோகார்ப் நிறுவனத்தின் இந்திய வணிகப் பிரிவின் தலைமை வணிக அதிகாரி அஷுதோஷ் வர்மா, "டெஸ்டினி 110, குடும்ப ஸ்கூட்டர் வாடிக்கையாளர்களின் அன்றாடத் யூவைகளை மையமாகக் கொண்டு, சௌகரியம், வசதி மற்றும் எரிபொருள் சிக்கனம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களின் விருப்பங்கள் தொடர்ந்து மாறிவருவதால், இந்த கிளாசிக் எடிஷன், புதிய இரட்டை வண்ணங்கள் மற்றும் தனித்துவமான நுணுக்கங்கள் மூலம் டெஸ்டினி 110 வரிசைக்கு ஒரு புத்துணர்ச்சியான வடிவமைப்பைக் கொண்டுவருகிறது.

அதே சமயம், அதன் முக்கிய அம்சங்களான நடைமுறைப் பயன்பாடுகளையும் இது தக்க வைத்துக் கொள்கிறது. இந்த புதிய வரவு, இந்த மாடலின் ஏற்கனவே உள்ள பலங்களை மேலும் மேம்படுத்தவும், டெஸ்டினி பிராண்டை வலுப்படுத்தவும் எங்களுக்கு உதவுகிறது," என்றார்.

பதக்கங்களை குவித்த மாற்றுத்திறன் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு!

சென்னை 31, அக்டோபர் 2026: ஆசிய பாரா விளையாட்டில் பதக்கங்கள் வென்று குவித்த தமிழ் நாடு வீரர், வீராங்கனைகள், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்;

ஜப்பானில் சமீபத்தில் நடைபெற்று முடிந்த 5வது Asian Para Games 2026-ல் இந்தியாவுக்காக 3 தங்கம் - 5 வெள்ளி - 7 வெண்கலம் என 15 பதக்கங்களைக் குவித்த நம் மாற்றுத்திறன் விளையாட்டு வீரர் - வீராங்கனைகளை இன்று நேரில் பாராட்டினோம். நம்முடைய தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் Para Athelets-க்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்களை நினைகூர்ந்து, நம் வீரர்கள் அன்பையும் - மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினர்.

தங்கைகள் கஸ்தூரி ராஜாமணி, பேபி சஹானா ரவி, மனிஷா ராமதாஸ், நித்யஸ்ரீ சுமதி சிவன், துளசிமதி முருகேசன், சந்தியா விஸ்வநாதன் - தம்பிகள் மதன், சிவராஜன் சோலைமலை, நவீன் சிவக்குமார், தர்மராஜ் சோலைராஜ், ருத்திக் ரகுபதி, சுதர்சன் முத்து சாமி, சரவணக்குமார், ஹரிஸ் என Asian Para Games-ல் சாதித்த நம் மாற்றுத்திறன் வீரர்கள் இன்னும் பல்வேறு வெற்றிகளைப் பெற வாழ்த்தி மகிழ்ந்தோம்! இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஏர் மார்ஷல் இந்தர்பால் சிங் வாலியா விமானப் படை துணைத் தளபதியாக நியமனம்

சென்னை 31, அக்டோபர் 2026: ஏர் மார்ஷல் இந்தர்பால் சிங் வாலியா, விமானப் படைத் துணைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். 01 நவம்பர் 2026 முதல் அவர் இந்தப் பொறுப்பை வகிப்பார். தற்போது, அவர் விமானப் படையின் கிழக்குப் பகுதி தளத்தின் தலைமைத் தளபதியாக உள்ளார். இந்தர்பால் சிங் வாலியா, தேசிய பாதுகாப்பு அகாதமியின் முன்னாள் மாணவர் ஆவார். இவர் 11 ஜூன் 1988 அன்று இந்திய விமானப்படையின் போர் விமானப் பிரிவில் அதிகாரியாக நியமிக்கப் பட்டார். இவர் மிக்-21, மிக்-23, மிக்-27, ஜாகுவார், சு-30 எம்கேஐ விமானங்களின் அனைத்து வகைகளிலும் தகுதி பெற்றுள்ளார். ஏறக்குறைய 40 ஆண்டுகள் நீடித்த தமது பணிக்காலத்தில், இவர் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்.

அவரது சிறந்த சேவையைப் பாராட்டி, அவருக்கு 2008-ல் வாயு சேனா பதக்கமும், 2018-ல் அதி விசிஷ்ட சேவா பதக்கமும் வழங்கப் பட்டன.

இந்தியாவில் உள்ள 20 லட்சத்திற்கும் அதிகமான ஓட்டுநர்கள் மற்றும் விநியோகக் கூட்டாளர்களின் வசதிக்காக புதிய அம்சங்களை அறிவித்துள்ள ஊபர்!

சென்னை 31, அக்டோபர் 2026: ஊபர் நிறுவனம், தனது ஓட்டுநர்களுக்கான 'ஊபர் பிரகதி' மூன்றாம் பதிப்பு நிகழ்வில், அவர்களுக்கான பிரத்யேகப் புதிய அம்சங்களை இன்று வெளியிட்டுள்ளது.

ஓட்டுநர்கள் எளிதாகவும், பாதுகாப்பாகவும், கூடுதல் வருவாய் ஈட்டும் வகையிலும் இந்த அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஓட்டுநர்கள் தங்களுக்கு நெகிழ்வான முறையில் வேலை செய்யும் வாய்ப்புகள், புதிய வருமான வழிகள் மற்றும் வாகனம் ஓட்டும் போது கூடுதல் பாதுகாப்பு வழங்கும் அம்சங்கள் இதில் அடங்கும். மேலும், அவசர காலங்களில் ஆம்புலன்ஸ் உதவி மற்றும் சர்ச்சைக்குரிய சம்பவங்களில் உண்மைகளைக் கண்டறிய உதவும் செயலியில் உள்ள குறியாக்கம் செய்யப்பட்ட (encrypted) வீடியோ பதிவு முறை உட்பட, தனது இணையற்ற பாதுகாப்பு தொழில்நுட்பத்தின் நிஜ உலகத் தாக்கத்தையும் ஊபர் எடுத்துக்காட்டியுள்ளது.

ஊபர் இந்தியா மற்றும் தெற்காசியாவின் விநியோக செயல்பாடுகள் பிரிவின் இயக்குநர் ஆதித்யா கபூர் பேசுகையில், "இந்தியாவில் நெகிழ்வான வருமான வாய்ப்புகளை வழங்கும் முதன்மைத் தளமாகத் தொடர்ந்து நீடிப்பதே எங்கள் விருப்பம். அதாவது, ஓட்டுநர்களுக்குத் தங்கள் சொந்த விருப்பப்படி பணியாற்றும் சுதந்திரம், துறைசார்ந்த சிறந்த பாதுகாப்பு அமைப்புகள் மீதான நம்பிக்கை மற்றும் ஈட்டுவதற்கு அதிக வழிகளை வழங்குவது ஆகும். ஒரு செயலியிலிருந்து ஓட்டுநர்கள் என்னென்ன எதிர்பார்க்கலாம் என்பதற்கான புதிய தரநிலையைத் தொடர்ந்து அமைக்க நாங்கள் விரும்புகிறோம்," என்று கூறினார்.

ஓட்டுநர்களின் கருத்துக்களின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டுள்ள முக்கிய மேம்பாடுகள்:

எளிதானது: அதிக நெகிழ்வுத்தன்மை, குறைவான சிரமம்

ஃபிளெக்சிபிள் டிரைவ் பாஸ் துறையிலேயே முதன்முறை பகுதிநேர மற்றும் முழுநேர ஓட்டுநர்கள் இருவரின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில், 6 மணி நேரம் முதல் 180 நாட்கள் வரையிலான சந்தா திட்டங்கள் (subscription passes) மூலம் ஓட்டுநர்களுக்கு அதிகபட்ச தேர்வுகளை ஊபர் வழங்குகிறது.

குவிக்பாஸ் | ரைடு-ஹெய்லிங் துறையிலேயே முதன்முறை ஓட்டுநர்கள் தாங்கள் தினமும் பயன்படுத்தும் வாட்ஸ்அப் செயலி மூலமாகவே ஊபரில் மிக எளிதாகவும் வசதியாகவும் இணைந்து கொள்ளலாம்.

'முதலில் சம்பாதியுங்கள், பிறகு செலுத்துங்கள்' (Earn First, Pay Later) பிற தளங்களில் உள்ள முன்கூட்டியே கட்டணம் செலுத்தும் முறைகளைப் போலல்லாமல், 'முதலில் சம்பாதியுங்கள், பிறகு செலுத்துங்கள்' என்ற திட்டத்தின் மூலம் தகுதியான ஓட்டுநர்களின் கணக்கு இருப்பு குறைந்தாலும், கூடுதல் கடன் வரம்பிற்குள் (கிரெடிட் லிமிட்) அவர்கள் தொடர்ந்து பணக் கட்டணப் பயணங்களை (கேஷ் ட்ரிப்ஸ்) மேற்கொள்ள ஊபர் அனுமதிக்கிறது. இது அவர்களின் அன்றாடப் பணிக்கு எந்தவிதத் தடங்கலும் ஏற்படுவதைத் தடுக்கிறது. வாசிப்பதை விட குரல்வழிக் கேட்பதை யே ஓட்டுநர்கள் அதிகம் விரும்புவதால், ஊபரின் செயலிக்குள் இருக்கும் சேட் (in-app chat) அம்சம் மூலம் பயணிகள் உடன் 'வாய்ஸ் நோட்ஸ்' வழியாக இனி அவர்கள் தொடர்புகொள்ளலாம்

ஒரே இரவில் நடக்கும் விறுவிறுப்பான கிரைம் திரில்லர் 'மின்னும் ஓர் இரவு'

சென்னை 31, அக்டோபர் 2026: நாகர்கோவிலில் பிரபல மருத்துவரும் தொழிலதிபருமான டாக்டர் பி. ராபர்ட் ராஜ், தனது எஸ்.பி. ராபர்ட் புரொடக்ஷன்ஸ் பேனரில் தயாரித்துள்ள 'மின்னும் ஓர் இரவு' திரைப் படத்தை முன்னணி விளம்பரப் பட இயக்குநரான சிவபிரபு செல்வராஜ் இயக்கியுள்ளார்.

இனிகோ பிரபாகர் முதன்மை வேடத்தில் நடித்துள்ள 'மின்னும் ஓர் இரவு' உலகெங்கும் உள்ள திரையரங்குகளில் நவம்பர் மாதம் வெளியாகிறது. அஞ்சு கிருஷ்ணா அஷோக் நாயகியாக நடிக்க சுப்பிரமணியம் சிவா, சத்யா, அருவி பாலா, உதயா, யாசர், ராஜன், அருவி மதன், பசுபதி உள்ளிட்டோர் முக்கிய பாத்திரங்களில் நடித்துள்ளனர்.

திரைப்படம் குறித்து பேசிய இயக்குநர் சிவபிரபு செல்வராஜ், "ஒரே இரவில் நடக்கும் விறுவிறுப்பான கிரைம் திரில்லராக 'மின்னும் ஓர் இரவு' திரைப்படத்தை உருவாக்கியுள்ளோம். இரவுப் பொழுதை உற்சாகமாகக் கடக்க காட்டுப் பகுதிக்குள் செல்லும் நண்பர்கள் மிகப்பெரிய அதிர்ச்சிகரமான சம்பவங்களில் சிக்குகின்றனர். அதிலிருந்து அவர்கள் மீண்டார்களா இல்லையா என்பதே கதை," என்றார்.

'மின்னும் ஓர் இரவு' திரைப்படத்திற்கு சுரேஷ்குமார் சுந்தரம் ஒளிப்பதிவு செய்ய பிரணவ் சூரஜ் இசையமைத்துள்ளார். படத்தொகுப்பை எஸ்.என். பாசில் கையாண்டுள்ளார். ஸ்டண்ட்: மிரட்டல் சிவா, கலை இயக்கம்: தேவராஜ், ஒப்பனை: சி. முத்து சுடலை, உடைகள்: கார்த்திக் தமிழ்வாணன், ஸ்டில்ஸ்: பாவிஷி பாலன், மக்கள் தொடர்பு: நிகில் முருகன்.

டாக்டர் பி. ராபர்ட் ராஜ் தயாரிப்பில் சிவபிரபு செல்வராஜ் இயக்கத்தில் இனிகோ பிரபாகர் முதன்மை ்ேடத்தில் நடித்துள்ள ஒரே இரவில் நடக்கும் விறுவிறுப்பான கிரைம் திரில்லர் 'மின்னும் ஓர் இரவு' நவம்பர் மாதம் திரையரங்குகளில் வெளியாகிறது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

பிஹெச்டிசிசிஜ மற்றும் டிடிஏஜி ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டதன் மூலம், ஆக்சிஸ் பேங்க், ஹோட்டல் மற்றும் விருந்தோம்பல் துறைக்கான பிரத்யேக திட்டத்தை அறிமுகப்படுத்திய இந்தியாவின் முதல் தனியார் துறை வங்கியாக மாறியுள்ளது

சென்னை 31, அக்டோபர் 2026: இந்தியாவின் மிகப் பெரிய தனியார் துறை வங்கிகளில் ஒன்றான ஆக்சிஸ் பேங்க், இன்று தனது எம்எஸ்எம்இ தொகுப்பின் கீழ் ஹோட்டல்கள் மற்றும் ரிசார்ட்களுக்கான தனிப்பயனாக்கப்பட்ட நிதி தீர்வுகளை வழங்கும் ஒரு பிரத்யேக ஹோட்டல் & ஹாஸ்பிடாலிட்டி ப்ரோக்ராம் ஐ அறிமுகப்படுத்தியது. மேலும், இந்த வங்கி பிஹெச்டி சேம்பர் ஆப் காமர்ஸ் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் (பிஹெச்டிசிசிஜ - சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் பிரிவு) மற்றும் ட்ராவல் & டூரிசம் ஆஃப் கோவா (டிடிஏஜி) ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது.

இன்று, இந்தியாவில் சுற்றுலாத்துறை முன்னெப்போதையும் விட பரந்த அளவிலான பயணிகளால் இயக்கப்படுகிறது; அவர்கள் புதிய இடங்களை அடைகின்றனர், ஒவ்வொரு பயணத்திற்கும் அதிகம் செலவழிக்கின்றனர், சிறந்த தங்குமிடங்களை எதிர்பார்க்கின்றனர். ஹோட்டல்கள் மற்றும் ரிசார்ட்டுகளுக்கு, இது புதிய சொத்துகள், புதுப்பித்தல்கள் மற்றும் விருந்தினர் அனுபவங்கள் ஆகியவற்றில் தீவிர முதலீட்டின் ஒரு காலமாக மாறியுள்ளது. இந்த வளர்ச்சியின் பெரும்பகுதியானது தங்களின் செயல்பாட்டு யதார்த்தங்களுக்கு ஏற்ற நிதி மற்றும் வங்கி தீர்வுகளைத் தொடர்ந்து தேடுகின்ற நடுத்தர அளவிலான மற்றும் தனிப்பட்ட விருந்தோம்பல் வணிகங்களால் இயக்கப்படுகிறது.

இந்த மாறிவரும் தேவைகளுக்கு பதிலளிக்கும் வகையில், இந்த வங்கி தனது சேவைகளை விருந்தோம்பல் துறையின் தனித்துவமான தேவைகளைச் சுற்றி வடிவமைத்துள்ளது. விரிவாக்கம், புதுப்பித்தல் மற்றும் சொத்து உருவாக்க திட்டங்களை ஆதரிக்க விருந்தோம்பல் சார்ந்த அளவுருக்களை கருத்தில் கொள்கின்ற இந்த ஹோட்டல் & ஹாஸ்பிடாலிட்டி ப்ரோக்ராம், ஹோட்டல்கள் மற்றும் ரிசார்ட்டுகள் செயல்படும் விதத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பிஹெச்டிசிசிஜ மற்றும் டிடிஏஜி உடனான இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், ஹோட்டல்கள், ரிசார்ட்டுகள், பயண முகமைகள் மற்றும் தொடர்புடைய வணிகங்களுடன் நெருக்கமான ஈடுபாட்டின் மூலம் தொழில் துறை இணைப்பை சேர்க்கின்றன. ஒன்றிணைந்து இவை தீர்வுகள் வடிவமைக்கப்படும் விதத்தில் துறையின் தேவைகளை மையமாக வைத்திருக்கின்றன.

இந்த அறிவிப்புகள் குறித்து கருத்து தெரிவிக்கையில், ஆக்சிஸ் பேங்க் இன் வணிக வங்கிச் சேவைக் குழு குழுமத் தலைவர் விஜய் ஷெட்டி கூறுகின்ற போது, "இந்தியப் பொருளாதாரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் ஒவ்வொன்றும் அதன் சொந்த செயல்பாட்டு முறையில் ஆழமாக இயங்குகின்றன. ஒரே மாதிரியான கடன் வழங்கும் முறையைத் தாண்டி, துறையின் சாரத்தை பிரதிபலிக்கும் முன்மொழிவுகளை வடிவமைப்பதே எங்கள் முயற்சியாக இருந்து வந்துள்ளது. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், ஒரு ஹோட்டல் அல்லது ரிசார்ட் வருமானம் ஈட்டும் விதம், அது செயல்படும் பருவங்கள் மற்றும் அதன் விருந்தினர்களுக்கு அது வழங்கும் அனுபவம் ஆகியவை பெரும்பாலும் ஒரு மாறுபட்ட கண்ணோட்டத்தைக் கோருகின்ற அத்தகைய ஒரு துறையாக இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டே ஹோட்டல் & ஹாஸ்பிடாலிட்டி ப்ரோகிராம் உருவாக்கப்பட்டுள்ளது, பிஹெச்டிசிசிஜ மற்றும் டிடிஏஜி உடனான எங்கள் கூட்டமைப்புகள், வணிகங்களுடனும் அவற்றைச் சுற்றியுள்ள தொழில்துறை உரையாடல்களுடனும் தொடர்ந்து ஈடுபட்டிருக்க உதவுகின்றன.

நாடு முழுவதும் மேலும் பலர் பயணத்தைக் கண்டறியும் நிலையில், அந்த அனுபவங்களை சாத்தியமாக்கும் நிறுவனங்களுக்கு அருகில் நாங்கள் நிற்க விரும்புகிறோம்." என்று கூறினார்.

சினிமா விமர்சனம் - எனிமி ஆஃப் தி ஸ்மக்ளர்ஸ் - சர்வதேச கடத்தல் கும்பலுக்கு எதிரான அதிரடி வேட்டையை விறுவிறுப்பாகச் சொல்லும் கிரைம் திரில்லர்!

சென்னை 31, அக்டோபர் 2026: சர்வதேச போதைப் பொருள் கடத்தல், சுங்கத்துறையின் அதிரடி விசாரணை, குற்றக் கும்பல்களின் பின்னணி, நட்பு, குடும்பப் பாசம், காதல், ஆக்ஷன் எனப் பல அம்சங்களை ஒருங்கிணைத்து உருவாகியுள்ள திரைப்படம் 'எனிமி ஆஃப் தி ஸ்மக்ளர்ஸ்'. எழுதி இயக்கியுள்ள டி. சமய முரளி, சுங்கத்துறை சார்ந்த தனது தொழில் முறை அனுபவத்தின் பின்னணியில் வித்தியாசமான கதைக் களத்தைத் தேர்ந்தெடுத்து இப்படத்தை உருவாக்கியுள்ளார்.

தமிழ் சினிமாவில் இதுவரை அதிகம் பேசப்படாத சர்வதேச சரக்குப் போக்குவரத்து, துறைமுகச் செயல்பாடுகள், சுங்கத்துறை விசாரணைகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் கும்பல்களின் செயல்பாடுகளை மையமாகக் கொண்டு உருவாகியுள்ள இப்படம், ரசிகர்களுக்கு புதியதொரு திரை அனுபவத்தை வழங்கும் வகையில் அமைந்துள்ளது.

சென்னை துறைமுகத்தில் சிறிய அளவிலான சரக்குத் தீர்வுப் பணிகளைச் செய்து வரும் அமர் என்ற இளைஞராக சரண் சக்தி நடித்துள்ளார். அவரது நண்பர் தீனா கதாபாத்திரத்தில் பாலா சரவணன் நடித்துள்ளார். இருவரும் தங்களது அன்றாட வாழ்க்கையில் பல்வேறு பொருளாதாரச் சவால்களை எதிர் கொண்டு வரும் நிலையில், மிகப் பெரிய போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கையின் பின்னணியில் சிக்கிக் கொள்கிறார்கள். அதன் பிறகு அவர்களது வாழ்க்கையில் ஏற்படும் எதிர்பாராத திருப்பங்களும், சர்வதேசக் குற்றக் கும்பல்களுடன் உருவாகும் மோதல்களுமே படத்தின் கதையை விறுவிறுப்பாக நகர்த்துகின்றன.

சர்வதேச அளவில் செயல்படும் கடத்தல் கும்பலின் முக்கிய நபராக லால் நடித்துள்ளார். இந்தியாவில் அந்தக் கும்பலின் செயல்பாடுகளை முன்னெடுக்கும் லிங்கம் என்ற கதாபாத்திரத்தில் ஜே.டி. சக்கரவர்த்தி நடித்துள்ளார். இவர்களுக்கிடையே உருவாகும் அதிகாரப் போட்டி, நம்பிக்கை, துரோகம் மற்றும் பணத்திற்கான பேராசை ஆகியவை கதையின் முக்கியமான திருப்பங்களாக அமைகின்றன.

நடிகர்கள்: சரண் சக்தி, பாலா சரவணன், ஜே.டி. சக்கரவர்த்தி, லால், ராதிகா சரத்குமார், ஸ்மேஹா மணிமேகலை, காளி வெங்கட், மைம் கோபி, வினோதினி வைத்தியநாதன் மற்றும் பலர்.

தொழில்நுட்பக் கலைஞர்கள்:

எழுத்து மற்றும் இயக்கம்: டி. சமய முரளி, தயாரிப்பு நிறுவனம்: எஸ்.ஆர். ட்ரீம்ஸ் / எஸ்.ஆர். ட்ரீம் ஸ்டுடியோஸ், தயாரிப்பாளர்: டி. சமய முரளி (அதிகாரப்பூர்வ கிரெடிட் உறுதிப்படுத்தப்பட வேண்டும்), இசை: டி. சமய முரளி (சில வெளியீடுகளில் சாம் டேனியல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது; அதிகாரப்பூர்வ உறுதிப்படுத்தல் தேவை), ஒளிப்பதிவு: ரோவின் பாஸ்கர் (உறுதிப்படுத்தப்பட வேண்டும்), படத்தொகுப்பு: ஸ்ரீ வாட்சன் (உறுதிப்படுத்தப்பட வேண்டும்), சண்டைப் பயிற்சி: தவசி ராஜ் பி ஆர் ஒ நிகில் முருகன்.

இந்தியாவின் 4வது நேவிகேஷன் செயற்கைக்கோளுடன் விண்ணில் பாய்கிறது ஜிஎஸ்எல்வி-எப் 18 ராக்கெட்

சென்னை 31, அக்டோபர் 2026: இந்தியாவின் நான்காவது நேவிகேஷன் செயற்கைக்கோளுடன் இன்று விண்ணில் பாய்கிறது ஜிஎஸ்எல்வி-எஃப் 18 ராக்கெட். ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தின் இரண்டாவது ஏவுதளத்தில் இருந்து இந்தாண்டின் 5-வது ராக்கெட் திட்டமான ஜிஎஸ்எல்வி-எப் 18 ராக்கெட் இன்று இரவு 11.51க்கு விண்ணில் ஏவப்படவுள்ளது. சுமார் 50 மீட்டர் உயரமும் 420 டன் எடையும் கொண்ட மூன்று அடுக்கு ஜிஎஸ்எல்வி ராக்கெட், 2,250 கிலோ எடை கொண்ட என்விஎஸ்-03 செயற்கைக் கோளை புவி ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தவுள்ளது. ஏற்கனவே, இந்தியாவிற்கு 3 வழிகாட்டல் அமைப்பு செயற்கைக்கோள் இருக்கும் நிலையில், தற்போது நான்காவது செயற்கைக்கோள் நேவிகேஷனுக்காக அனுப்பப்படுவது குறிப்பிடத்தக்கது.

நேவிக் எனப்படும் இந்தியாவின் வழிகாட்டல் அமைப்பின் சேவைகள் தடையின்றித் தொடர்வதை உறுதிசெய்யும் பொருட்டு இந்த செயற்கைக்கோள் வடிவமைக்கப்பட்டுள்ளது. நாட்டின் பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டுக்கான துல்லியமான இருப்பிடம், வழிகாட்டல் மற்றும் நேரச் சேவைகளை இந்த செயற்கைக்கோள் வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான பிரத்யேகமான முறையில் செயற்கைக்கோள் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

லாவண்யா அபிராமி தயாரிப்பில் சி. கணேஷ் குமார் இயக்கத்தில் பிரேம்ஜி அமரன் நடிக்கும் புதிய படம்

சென்னை 31, அக்டோபர் 2026: 'வல்லமை', 'நரி வேட்டை' உள்ளிட்ட பல திரைப்படங்களுக்கு படத்தொகுப்பாளராக பணியாற்றிய சி. கணேஷ்குமார், அபிராமி புரொடக்ஷன்ஸ் பேனரில் லாவண்யா அபிராமி தயாரிக்கும் புதிய படத்தின் வாயிலாக இயக்குநராக அறிமுகமாகிறார்.

இளம்பெண் ஒருவரை யார் கொலை செய்தார்கள், எதற்கு செய்தார்கள் என்பதை மர்ம முடிச்சுகளோடு பார்வையாளர்களுக்கு சொல்லும் இந்த கிரைம் திரில்லர் கதையில் பிரேம்ஜி அமரன் முதன்மை வேடத்தில் நடிப்பதோடு இசையும் அமைக்கிறார்.

போஸ் வெங்கட், சஸ்திக், நயனா சாய் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடிக்கும் இப்படம் வேகமாக வளர்ந்து தற்போது படப்பிடிப்பின் இறுதி கட்டத்தில் உள்ளது. அனைத்து பணிகளையும் இதே வேகத்தில் முடித்து படத்தை விரைவில் வெளியிட குழுவினர் திட்டமிட்டுள்ளனர். இன்னும் பெயரிடப் படாத இப்படத்தை குறித்து பேசிய இயக்குநர் சி. கணேஷ் குமார், "தொடக்கம் முதல் இறுதி வரை பார்வையாளர்களை இருக்கையின் நுனியில் அமர வைக்கும் வகையில் இப்படம் உருவாகி வருகிறது. இதுவரை ஏற்றிராத வேடத்தில் பிரேம்ஜி அமரன் இந்த திரைப்படத்தில் நடிக்கிறார். போஸ் வெங்கட் போன்ற அனுபவமிக்க நடிகர்களோடு பணிபுரிவது சிறந்த அனுபவமாக உள்ளது," என்றார்.

இந்த திரைப்படத்திற்கு சிற்பி குமார் ஒளிப்பதிவு செய்ய இயக்குனர் சி. கணேஷ் குமாரே படத்தொகுப்பையும் கையாளுகிறார். சண்டைப் பயிற்சி: எஸ். ஆர். ஹரி முருகன். படப்பிடிப்பு இறுதி கட்டத்தை எட்டியுள்ள நிலையில் போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் விரைவில் தொடங்க உள்ளன.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 | 8144337349
பொது இ-சேவை மையம்

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அக்டோபர் 31, நவம்பர் 1-ம் தேதிகளில் மகாராஷ்டிரா, ஹரியானா மாநிலங்களுக்கு பயணம்

சென்னை 31, அக்டோபர் 2026: குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, 2026 அக்டோபர் 31, நவம்பர் 1 தேதிகளில் மகாராஷ்டிரா, ஹரியானா மாநிலங்களுக்குப் பயணம் மேற்கொள்கிறார்.

அக்டோபர் 31-ம் தேதி, மகாராஷ்டிர மாநிலம் நாசிக்கில் நடைபெறும் சிம்ஹஸ்த மஹா கும்பத்தின் த்வஜ் ஸ்தம்ப பூஜை, தவஜ பூஜை, த்வஜாரோஹண விழா ஆகியவற்றில் குடியரசுத் தலைவர் கலந்து கொள்கிறார். இந்த நிகழ்வில் அவர் உரையாற்றவுள்ளார்.

நவம்பர் 1-ம் தேதி, ஹரியானா மாநிலம் உருவானதன் 60 ஆம் ஆண்டு விழாவான 'ஹிரக் ஜெயந்தி' கொண்டாட்டத்தில் குடியரசுத் தலைவர் குருக்ஷேத்திரத்தில் கலந்துகொள்கிறார்.

மேலும், குருக்ஷேத்திரத்தில் சுவாமி ஸ்ரத்தானந்த்தின் தியாக நூற்றாண்டு விழாவை நினைவுகூரும் வருடாந்திர விழாவிலும் அவர் கலந்து கொள்ளவுள்ளார்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
சனி, அக்டோபர் 31, 2026

துனிசியா திரைப்பட விழாவில் முத்திரை பதித்த இந்தியா; 'டோயாஜ்' குறும்படத்திற்கு விருது

சென்னை 31, அக்டோபர் 2026: துனிசியாவில் நடைபெற்ற 12-வது ஜெர்பா சர்வதேச பெண்கள் மற்றும் இளைஞர் திரைப்பட விழாவில், 'சிறப்பு விருந்தினராக' பங்கேற்றதன் மூலம், இந்தியா தனது தூதரக மற்றும் திரைப்படத் துறை சார்ந்த சிறப்பை உலக அரங்கில் வெளிப்படுத்தியது. அக்டோபர் 24 முதல் 27 வரை

நான்கு நாட்கள் நடைபெற்ற இந்த மதிப்புமிக்க விழாவில், இந்தியாவின் 'டோயாஜ்' எனும் குறும்படம் நாட்டிற்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தது.

அபிஜீத் ஸ்ரீவாஸ்தவா இயக்கிய 'டோயாஜ்' குறும்படம், இந்த சர்வதேச விழாவில் திரையிடப்பட்டது மட்டுமின்றி, மிகவும் போட்டி நிறைந்த குறும்படப் பிரிவில் மூன்றாவது பரிசையும் வென்றுள்ளது. இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். இப்படத்தின் கதைக்களமும், தொழில்நுட்பத் தரமும் சர்வதேச பார்வையாளர்களையும் நடுவர் குழுவினரையும் வெகுவாகக் கவர்ந்தன.

துனிசியாவில் உள்ள இந்தியத் தூதரகம், 'எக்ஸ்' சமூக ஊடகத் தளத்தில், "வெற்றி! 12-வது ஜெர்பா சர்வதேச பெண்கள் மற்றும் இளைஞர் திரைப்பட விழாவின் அதிகாரப்பூர்வ குறும்படப் போட்டியில் 'டோயாஜ்' மூன்றாவது பரிசை வென்றுள்ளது! இயக்குனர் அபிஜீத் ஸ்ரீவாஸ்தவா மற்றும் படக்குழுவினருக்கு மன

மார்ந்த வாழ்த்துகள்!" என்று பதிவிட்டுள்ளது.

பெண்கள் மற்றும் இளம் திரைப்படத் தயாரிப்பாளர்களை மையமாகக் கொண்ட இந்த சர்வதேச திரைப்பட விழா, உலகம் முழுவதிலுமிருந்து பல்வேறு கலைப் படைப்புகளை ஒன்றிணைத்தது. இந்தியா தவிர, அல்ஜீரியா, மொராக்கோ, லெபனான், எகிப்து, சிரியா, பஹ்ரைன், கத்தார், குரோஷியா, அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் பாலஸ்தீனம் உள்ளிட்ட 38 நாடுகளிலிருந்து 68 சிறந்த திரைப்படங்கள் இந்த விழாவில் திரையிடப்பட்டன.

இந்த விழாவில் இந்தியாவுக்குக் கிடைத்த 'சிறப்பு விருந்தினர்' அந்தஸ்தும், 'டோயாஜ்' குறும்படத்தின் அபார வெற்றியும் உலக அரங்கில் இந்தியத் திரைப்படத் துறையின் நிலையை மேலும் வலுப்படுத்தியுள்ளன.

இந்தச் சாதனை, இந்தியா மற்றும் துனிசியா இடையிலான கலாச்சாரப் பரிமாற்றங்களை ஆழப்படுத்துவதிலும், கலை சார்ந்த ஒத்துழைப்பை ஊக்குவிப்பதிலும் திரைப்படத் துறை வகிக்கும் முக்கிய பங்கினை எடுத்துரைக்கிறது.

"எனது திரைப்பயணத்தில் 'சைக்கிள் கேப்' மிக முக்கியமானத் திரைப்படம்"- நடிகை ஷெர்ரி அகர்வால்!

சென்னை 31, அக்டோபர் 2026: தெலுங்கு, பஞ்சாபி, இந்தி மற்றும் கன்னடத் திரைப்படங்களில் நடித்துள்ள நிலையில், தற்போது தமிழ்த் திரையுலகிலும் 'சைக்கிள் கேப்' திரைப்படம் மூலம் அறிமுகமாகிறார் நடிகை ஷெர்ரி அகர்வால். 1990களின் காதலில் இருந்த அப்பாவித்தனத்தையும் பழைய நினைவுகளையும் இன்றைய தலைமுறையின் உணர்வுகளோடும் ரசனைகளோடும் இணைக்கும் உணர்வுப்பூர்வமான மியூசிக்கல் காதல் திரைப்படமாக உருவாகியுள்ளது 'சைக்கிள் கேப்'.

இசை, காதல் மற்றும் அனைவருக்கும் நெருக்கமான மனித உணர்வுகளை மையமாகக் கொண்டு உருவாகும் இப்படம், இரண்டு தலைமுறைகளின் காதல் உணர்வுகளையும் ஒரே கதையில் இணைக்க முயல்கிறது. கடந்த காலத்தின் இனிமையான நினைவுகளை மீட்டெடுக்கும் அதேவேளையில், இன்றைய தலைமுறை ரசிகர்களுடனும் தொடர்பை ஏற்படுத்தும் வகையில் இப்படத்தின் கதை அமைந்துள்ளது. ட்யூப்லைட் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில், எம்.ஆர். பாரதி இயக்கியுள்ள இப்படத்தில், தயாரிப்பாளரும் கதாநாயகனுமான நவாஸுடன் இணைந்து ஷெர்ரி அகர்வால் நடித்துள்ளார்.

'சைக்கிள் கேப்' திரைப்படத்தில் பணியாற்றிய அனுபவம் குறித்து ஷெர்ரி அகர்வால் பகிர்ந்து கொண்டதாவது, "ஒரு நடிகையாக, 'சைக்கிள் கேப்' திரைப்படத்தில் பணியாற்றியது மறக்க முடியாத பல நினைவுகளை கொடுத்துள்ளது. படப்பிடிப்பு முழுவதும் பாசிட்டிவாக இருந்தது. படக்குழுவினர் அனைவரும் இனிமையாக பழகினர். பல விஷயங்களைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பாகவும் மாற்றியது. இவர்களுடன் மீண்டும் இணைந்து பணியாற்ற வேண்டும் என விரும்புகிறேன்.

ட்யூப்லைட் புரொடக்ஷன்ஸ், தயாரிப்பாளரும் கதாநாயகனுமான நவாஸ், இயக்குநர் எம்.ஆர். பாரதி சார், ஒளிப்பதிவாளர் சாலமன் சார், ஹேமந்த்

செல்வராஜ் சார், எக்ஸிகியூடிவ் புரொடியூசர் சுஜா சூர்ய நிலா மற்றும் 'சைக்கிள் கேப்' படக் குழுவினர் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயம் பார்வையாளர்களுக்கும் பிடித்த படமாக இது இருக்கும் என நம்புகிறேன்" என்றார்.

தெலுங்கில் 'ஏப்ரல் 28த் எம் ஜரிகிந்தி?', 'ராம் அசுர்', 'ஐ ஹேட் யூ' ஆகிய திரைப்படங்களிலும் ஷெர்ரி அகர்வால் நடித்துள்ளார். டீசர் வெளியாகியுள்ள 'எந்தவாருகானி' என்ற வரவிருக்கும் தெலுங்குப் படத்திலும், 'ஆகர்ஷிதா' என்ற கன்னடப் படத்திலும், 'கௌஷிகி', 'ஜபிஎஸ் துபே' ஆகிய இந்திப் படங்களிலும், 'பெனாமி' என்ற தெலுங்குப் படத்திலும் அவர் நடித்துள்ளார்.

திரைப்படங்கள் மட்டுமல்லாது, சௌபால் தளத்தில் வெளியிடப்பட்டு யூடியூப்பிலும் காணக் கிடைக்கும் பஞ்சாபி இணையத் தொடரான 'ரேஞ்ச்' தொடரிலும் நடித்துள்ளார். இதுதவிர, டி-சீரிஸ், ஜீ மியூசிக் மற்றும் ரெட் ரிப்பன் மியூசிக் உள்ளிட்ட நிறுவனங்களின் தயாரிப்புகளில் உருவான பஞ்சாபி மற்றும் இந்தி இசை வீடியோக்களிலும் அவர் நடித்துள்ளார்.

தமிழ் திரையுலகில் தான் அறிமுகமாகும் 'சைக்கிள் கேப்' தனது திரைப்பயணத்தில் மிக முக்கியமான படம் என்கிறார் ஷெர்ரி அகர்வால். இசை, காதல் மற்றும் 1990 களின் காதலில் நிறைந்த அப்பாவித்தனம் ஆகியவற்றின் கலவையாக உருவாகியுள்ள இப்படம், பல தலைமுறை ரசிகர்களின் மனங்களிலும் உணர்வுபூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சினிமா விமர்சனம் - சிங்காரம் - யோகி பாபுவின் சிறப்பான நடிப்பில் சமூக நீதியையும் மனித மாண்பையும் போற்றும் அற்புதமான படைப்பு!

சென்னை 31, அக்டோபர் 2026: சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் 'ழ்க்கை, உரிமைக்கான குரல், அரசியல் பங்கேற்பு, குடும்ப உணர்வுகள், நகைச்சுவை எனப் பல அம்சங்களை அழகாக இணைத்து ரசிகர்களுக்கு வித்தியாசமான திரை அனுபவத்தை வழங்குகிறது இயக்குநர் கே.வி. கதிர்வேலுவின் 'சிங்காரம்'.

தமிழ் சினிமாவில் எளிய மனிதர்களின் வாழ்க்கையையும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் மையமாகக் கொண்டு உருவாகும் திரைப்படங்கள் எப்போதும் தனித்துவமான கவனத்தைப் பெறுகின்றன. அந்த வரிசையில், யோகி பாபு கதாநாயகனாக நடித்துள்ள 'சிங்காரம்' முக்கியமான சமூகக் கருத்தை மையமாகக் கொண்டு உருவாகியுள்ளது. நரிக்குறவர் சமூகத்தின் வாழ்வியல், வரலாறு, கலாசாரம், சமூகத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் புறக்கணிப்புகள் மற்றும் சம உரிமைக்கான அவர்களது எதிர்பார்ப்புகளைப் பேசும் கதைக்களம் இப்படத்திற்கு சிறப்புச் சேர்க்கிறது.

நரிக்குறவர் சமூகத்தைச் சேர்ந்த ஒரு சாதாரண மனிதன் தனது வாழ்க்கையில் எதிர்கொள்ளும் அனுபவங்களின் வழியாக, தன்னம்பிக்கையையும் துணிச்சலையும் வளர்த்துக்கொண்டு அரசியலில் ஈடுபட்டு சட்டமன்ற உறுப்பினராக உயர்வதே படத்தின் மையக்கரு. சமூகத்தில் ஒவ்வொருவருக்கும் சமமான மரியாதையும் வாய்ப்பும் கிடைக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையை இப்படம் முன்வைக்கிறது. பிறப்போ, பொருளாதார நிலையோ ஒருவரின் கனவுகளுக்கும் வளர்ச்சிக்கும் தடையாக இருக்கக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் திரைக்கதை அமைந்துள்ளது. இப்படத்தின் முக்கியமான சிறப்பு, பொதுவெளியில் அதிகம் பேசப்படாத ஒரு சமூகத்தின் வரலாற்றையும் வாழ்வியல் அனுபவங்களையும் திரைப்படத்தின் மூலம் பரந்த அளவிலான மக்களிடம் கொண்டு சேர்க்கும் முயற்சியாகும்.

மொத்தத்தில், 'சிங்காரம்' என்பது நகைச்சுவை, குடும்ப உணர்வுகள், அரசியல் பின்னணி மற்றும் சமூகச் சிந்தனை ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் அர்த்தமுள்ள திரைப்படமாக அமைந்துள்ளது. யோகி பாபுவின் மாறுபட்ட கதாபாத்திர நடிப்பு, வலுவான துணை நடிகர்கள், கே.வி. கதிர்வேலுவின் சமூக அக்கறைமிக்க இயக்கம், சாம் சி.எஸ். இசை எனப் பல சிறப்புகளுடன் ரசிகர்களின் கவனத்தை ஈர்க்கும் படைப்பாக 'சிங்காரம்' திகழ்கிறது. மனித மாண்பு, சமத்துவம், துணிச்சல் மற்றும் சாதிக்க வேண்டும் என்ற கனவு ஆகியவற்றை முன்னிறுத்தும் இப்படம் தமிழ் சினிமாவில் ஒரு குறிப்பிடத்தக்க முயற்சியாகும்.

நடிகர்கள்:

யோகி பாபு, வேல ராமமூர்த்தி, எம்.எஸ். பாஸ்கர், மரியா வின்சென்ட், சார்ம்ஸ், ஆர்த்தி கணேஷ், மனோபாலா, கல்கி, மாரிமுத்து, படவா கோபி, சென்ட்ராயன், டி.எஸ்.ஆர்., தீபா சங்கர், சபிதா ராய், ஜாவா சுந்தரேசன், கே.எம். கணேஷ்கர் மற்றும் பலர்.

தொழில்நுட்பக் கலைஞர்கள்:

தயாரிப்பு நிறுவனம்: ராக் புரொடக்ஷன்ஸ், தயாரிப்பாளர்கள்: ஏ.எஸ். ரமண பாலாஜி, பத்மாவதி காந்தி, எழுத்து மற்றும் இயக்கம்: கே.வி. கதிர்வேலு, இசை: சாம் சி.எஸ்., பாடல்கள்: விவேகா, ஒளிப்பதிவு: பிரசன்னா எஸ். குமார், படத்தொகுப்பு: லாரன்ஸ் கிஷோர், கலை இயக்கம்: குருராஜ், சண்டைப் பயிற்சி: ஃபேன்டம் பிரதீப், மக்கள் தொடர்பு: ரியாஸ் கே அஹ்மத், பாரஸ் ரியாஸ்

இந்தியா, பெல்ஜியம், லக்செம்பெர்க் நாடுகளிடையே பொருளாதாரத்தை மேம்படுத்துவது குறித்த கருத்தரங்கு

சென்னை 31, அக்டோபர் 2026: இந்தியா- பெல்ஜியம்- லக்செம்பெர்க் பொருளாதார ஒன்றியத்தின் கூட்டு பொருளாதார ஆணையத்தின் 19-வது அமர்வு, 2026 அக்டோபர் 29-ம் தேதியன்று, லக்செம்பெர்க்கில் நடைபெற்றது. இதில், மூன்று நாடுகள் இடையேயான வர்த்தகம், முதலீடு, பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது. இதில், இந்திய வர்த்தகத்துறை செயலாளர் திரு ராஜேஷ் அகர்வால், பெல்ஜியம், லக்செம்பெர்க் நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

விமானப் போக்குவரத்து, துறைமுகங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, நவீனத் தொழில்நுட்பம், நிதிச் சேவை, டிஜிட்டல் தொழிநுட்பம், தகவல் மற்றும் தொலைதொடர்பு, சுகாதாரம், உயிரி அறிவியல், ஆயுர் வேதம், பாரம்பரிய மருந்துகள், உணவு, வேளாண்மை உள்ளிட்ட துறைகளில் இந்தியா, பெல்ஜியம், லக்செம்பெர்க் ஆகிய நாடுகள் இணைந்து செயல்படுவது குறித்தும் ஆலோசனை நடத்தப் பட்டது. விண்வெளி, ஆராய்ச்சி, புத்தாக்கம், உயர்கல்வி, திறன் மேம்பாடு ஆகியவற்றில் புதிய வாய்ப்புகளை உருவாக்குவது, வர்த்தகம் தொடர்பான சந்தைகளை மேம்படுத்துவது, பொருளாதாரத்தை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக மூன்று நாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்தும் இந்த அமர்வில் விவாதிக்கப் பட்டது.

மேலும், இந்திய வர்த்தகத்துறை செயலாளர் திரு ராஜேஷ் அகர்வால், லக்செம்பெர்க் நாட்டில் உள்ள முன்னணி தொழில் நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்து வரும் இந்தியாவில் முதலீடு செய்ய அவர்களுக்கு அழைப்பு விடுத்தார். அதற்கான சாத்தியக் கூறுகளையும் திரு ராஜேஷ் அகர்வால் எடுத்துரைத்தார்.